www.tamilarangam.net

# தமிழர்களை முஸ்லிம்கள் காட்டிக்கொடுத்தனரா?

அண்மைக்காலமாக அரச - புலிகள் மோதல் பலமடைந்து வருவ
தால் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிலை கொண்டிருந்த
புலிகள் புறமுதுகு காட்டியது அனைவருக்கும் தெரியும். தற்போது அப்பாவி
முஸ்லிம்களை மறைந்திருந்து தாக்கி வரும் புலிகள் அதனை நியாயப்படுத்த
முஸ்லிம்கள் தமிழர்களை 'புலிகள்' என இலங்கை இராணுவத்தினருக்கு
காட்டிக்கொடுத்தவர் எனும் பழியைப் போடுகின்றனர்.

இலங்கையில் பல காலங்களாக தமிழ் முஸ்லிம் நல்லுறவு பேணப்பட்டு
வந்தது. ஆனால் ஆயுதந்தாங்கிய தமிழர் பலர் தமதுள்ளங்களில் இனவா
தத்தை திரும்பி முஸ்லிம்களுக்கெதிரான அடாவடித்தனங்களில் இறங்கியதன்
விளைவாகவே தமிழ் முஸ்லிம் நல்லுறவு சிதைந்தது.

1990 ஜூன் மாதம் அரசுடன் புலிகள் மோதிக்கொண்டதனால் கணிச
மானோர் பாதிக்கப்பட்டனர். அப்பாவிகளும் தாக்கப்படுவது இத்தகைய
போர்களில் தவிர்க்க முடியாதது தான். பல பயங்கரவாதிகள் பொதுமக்களுக்
குள் மறைந்து கொள்வதனால் இத்தகைய நிலை ஏற்படலாம். ஆனால்,
முஸ்லிம்கள் தமிழர்களைக்காட்டிக்கொடுத்தனர் என்பது உண்மை எதுவென
தெரிந்து கொண்டே வீசப்படும் அபாண்டமாகும். சமூகத்துக்குக் கட்டுப்ப
டாத சில முஸ்லிம் வாலிபர்கள் இராணுவத்துடன் ஒத்துழைத்திருக்கலாம்.
அதனை வைத்து முழு முஸ்லிம்கள் மீதும் பழி போடுவது அறிவற்ற செயலா
கும். எல். ரீ. ரீ யினர் வட கிழக்கில் ஆட்சியிலிருந்த போது கூட முஸ்லிம்கள்
விசனம் கொள்ளுமளவு நடந்துகொண்டனர். அப்போது சில தமிழர்கள் அப்
பாவி முஸ்லிம் வாலிபர்களை 'ஆயுதந்தாங்கியோர்' என காட்டிக்கொடுத்த
தனால் புலிகள் அவர்களை பிடித்துச்சென்றனர்.

... தமிழர் சிலர் இவ்வாறு காட்டிக்கொடுத்ததற்காக முழு தமிழ் சமூ
கத்தின் மீதும் முஸ்லிம்கள் பழி சுமத்தினரா? இல்லையே! அதே போல் புலி
களுடன் முஸ்லிம் சமூகத்தின் சில முனாபிக் கள் இணைந்து செயற்பட்டது
அனைவருக்கும் தெரியும், அரசுக்கும் புரியும். அதற்காக இலங்கை இராணு
வம் முழு முஸ்லிம்கள் மீதும் பழியைப்போட்டு அவர்களைத் தாக்கினரா?
எத்தனை நியாயமாய் அவர்கள் நடந்து கொண்டனர்.
எந்த சமூகத்திலும் ஊருக்குக்கட்டுப்படாத சிலர் இருக்கத்தான்
செய்வர். அதற்காக முழு ஊரையும் குற்றம் சாட்டுவது விவேகமானதல்ல.
உண்மையில் கிழக்கு முஸ்லிம்கள் இராணுவத்தின் உதவியை நாடியிருந்தால்
இந்நேரம் கல்முனை தமிழ்ப்பகுதி, காரைதீவு போன்றஊர்கள் பெருந்தாக்
குதலுக்குள்ளாகியிருக்கும், ஆனால் முஸ்லிம்கள் பொறுமையைக் கடைப்
பிடித்தனர். 1984 காரைதீவுச்சம்பவத்தில் தாம் முட்டாள்களாக்கப்பட்டபோ
தும் இம்முறை ஆவிவிடக்கூடாதுஎன்பதில் அவர்கள் கவனமாயிருந்தனர்
அதனாலேயே இந்த ஊர்கள் தாக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, இராணுவ
நடவடிக்கைகளுக்குப்பயந்து கல்முனைக்குடி போன்ற முஸ்லிம் ஊர்களுக்குள்
தமிழ்ப்பெண்களும், வாலிபர்களும் தஞ்சம் புகுந்த போது மனிதாபிமானம்
கருதி முஸ்லிம்கள் உதவியதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவற்றையெல்லாம் உணராமல் புலிகள் முஸ்லிம்களை கொள்ளை,
கொலைகள் செய்து வருகின்றனர். இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான
அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய ஈனத்தனமான செயல்
களைப்பொறுக்கமுடியாமல் சில முஸ்லிம் வாலிபர் கொதித்தெழுந்து பதில்
நடவடிக்கையில் ஈடுபடலாம். அதற்காக அவர்களைக்குறை கூறவும் முடி
யாது ஏனெனில் சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறையைப் பொறுக்க
முடியாமல் தான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர், தமிழ்ப் பேரினவாதஒடுக்
முறை அவ்வாறே செயல்படும் போது முஸ்லிம் இளைஞர்களும் கொதித்தெழுவது
நியாயமானதே! ஆகவே தமிழ் மக்கள் முஸ்லிம்களைப்புரிந்து கொள்வது அவ
சரத்தேவையாகும். முஸ்லிகள் மீது வீண் பழிகளை சுமத்தி அவர்கள் மீது
அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதனால் இவ்விரு சமூகங்களுக்குமிடையில்
இடைவெளி மேலும் பெரிதாகிவிடும். இந்த நாட்டைப்பொறுத்தவரை தமி
ழர்களும் முஸ்லிம்களும் மோதிக்கொள்வதனால் எவரது உரிமைகளையும்
பெறப்போவதில்லை. இதனால் கொள்ளையரைத்தவிர வேறு எவருக்கும்
பிரயோசனமில்லை யென்பதை அனைத்து தமிழ் இயக்கங்களும் உணர்ந்து
செயற்பட வேண்டும். ஒருவர் பிறரை மதிப்பதன் மூலம் தமிழ் - முஸ்லிம்
உறவை மீண்டும் புதுப்பிக்க முனைவோம்.

- முபாறக் அப்துல் மஜீத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்